[8th August 1966

கொள்ளவேண்டுமே தவிர இல்லை என்று சொல்வதற்குரிய வாய்ப்பும் வசதியும் இருக்காது. ஆகவே போலீஸ் ஸ்டேஷன்களை தவிர்த்து வேறு இடங்களில் வைப்பதற்கு ஆலோசனை செய்யப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : போலீஸ் ஸ்டேஷன் என்றிருந்தாலும் சரியான முறையில் தான் விசாரிக்கப்படுகிறது.

Japanese Experts Team

* 240 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Japanese Experts Team which visited the multimineral mine site at Mamandur in South Arcot district has submitted it preliminary report ; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) கனிப் பொருள் படிவங்களின் தன்மை, அளவு ஆகியவற்றைப் பற்றி இந்தியப் புவியியல் ஆராய்ச்சி நிறுவனமும் மாநிலப் புவியியல் துறையினரும் கூறியுள்ளவற்றை ஜப்பானிய நிபுணர் குழு ஒப்புக்கொண்டுள்ளது. கனிப்பொருள் ஆய்வுப் பணியை தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அக்குழு பரிந்துரைத்துள்ளது.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ஆராய்ச்சி இலாகாவானது இதிலிருந்து என்னென்ன உலோகங்கள் கிடைக்கும், எந்த அளவுக்கு கிடைக்கும் என்று கண்டு பிடித்திருக்கிறார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : என்னிடத்தில் இருக்கின்ற தகவல்படி காப்பர் ஓர், ஸிங்க் ஓர், லெட் ஓர் கிடைக்கின்றன. காப்பர் ஓர் 63 சத விகிதம், லெட் ஓர் 2 சத விகிதம், ஸிங்க் ஓர் 2.73 சத விகிதம் என்ற அளவில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பொருட்கள் எவ்வளவு பரப்புக்கு கிடைக்கிறது ? இதிலிருந்து மொத்தம் எத்தனை டன்கள் கிடைக்கும், அதிலிருந்து தூய்மைப் படுத்தப்பட்ட உலோகங்கள் எந்த அளவுக்கு கிடைக்கும் என்பன போன்ற மதிப்பீட்டுக் கணக்கு ஏதேனும் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அப்படியென்றால் அதன் விவரங்கள் என்னென்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A deposit of one million tons is worth mining and considered to be in economic unit for mining. Mining can be done at the second stage at the rate of 250 tons per day. At this rate the reserve will last for ten years.

திரு. சா. கணேசன் : ஒரு நாளைக்கு இத்தனை டன் படிவம் பொருட்கள் அதாவது 'ஓர்ஸ்' கிடைக்கக்கூடும் என்ற கணக்கை தெரிவித்தார்கள். அதிலிருந்து சுத்தப்படுத்தப்பட்ட உலோகம்

8th August 1966]

எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பீட்டுக் கணக்கு சொல்கிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இந்தத் தகவல் இப்போது என்னிடமில்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) FIRE ACCIDENTS AND CRIMES IN USILAMPATTI.

MR. SPEAKER: Sri P. K. Mookiah Thevar has given notice of an adjournment motion.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர்: கனம் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் கண்மாய்க்கரையில் நேற்று பிற்பகல் ஒன்றரை மணிக்கு தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 20 கடைகளுக்கு பெருத்த சேதமும், நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. இது தற்செயலாக நடைபெற்ற சம்பவம் அல்ல. சென்ற சில வாரங்களாகவே உசிலம்பட்டி கிராமத்தில் தீ வைத்தல், எதிர்க்கட்சி கூட்டங்களை பலாத்காரமாகக் கலைத்தல், கல் எறிவது, பயங்கரமான ஆயுதங்கள் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாக்குதல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே இதைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, உசிலம்பட்டியில் ஒருசில மாதங்களுக்குள் 10 கொலைகள் நடந்திருக்கின்றன. இதுவரை ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்று டெப்புடி சூப்பிரன்டென்டென்ட் அவர்கள் கண்டுபிடித்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த விவரங்களையெல்லாம் நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். துரிதமாக நடவடிக்கை இல்லாத காரணத்தினால், இந்தச் சம்பவங்களால் பொது மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சபையை ஒத்தி வைத்து இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்கவேண்டும் என்பதற்காக ஒத்தி வைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் விவரித்துள்ளதிலிருந்து இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவர்கள்—நாளைக்கு கடைசி நாள்—இந்தத் தொடர்க் கூட்டத்திலேயே, நாளைக்கு விடை அளிக்கக் கூடிய வகையிலே, ஒரு 'கால் அட்டென்ஷன்' நோட்டீஸ் கொடுத்தால், இப்பொழுதே எழுதிக் கொடுத்தால் எவ்வளவு தகவல் கிடைக்குமோ அவைகளைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம். ஆனால், இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.